சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **242 / 2016**

பெயர்: திலகவதி ம.சா. 1 தேதி 01.04.2025

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து பற்றி எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் எனது சகோதரர் சொன்னார். எனது கணவரை குளித்தலை பிரேத பரிசோதனை அறையில் வைத்து பார்த்தேன். எனது கணவர் வீட்டில் இருந்து ஆட்டோவில் சென்றார். எனது கணவர் ஆட்டோவில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றார். துரை என்பவர் ஆட்டோவிற்கு பின்புறம் சென்றார். எனது கணவர் ஆட்டோவை தாறுமாறாக ஓட்டி ரோட்டின் மைய கோட்டை தாண்டி கல்லுபாலம் அருகில் நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரர் ஓட்டுநர் பொறுப்பாளி அல்ல என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது இரவு 9.00 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கு சம்பந்தமாக நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. எனது கணவர் மாதத்திற்கு ரூ.15,000/- சம்பாதித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவரின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை காண்பிப்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.